# சென்னையில் சுதந்திர தின கொண்டாட்டம்

– நமது நிருபர் குழு –

சென்னையில், சுதந்திர தின விழாவை முன்னிட்டு, அரசு அலுவலகங்களில், தேசிய கொடி ஏற்றப்பட்டது.

தெற்கு ரயில்வே சார்பில், பெரம்பூரில் உள்ள ரயில்வே அரங்கத்தில், சுதந்திர தின விழா, நேற்று கொண்டாடப்பட்டது.

தெற்கு ரயில்வே கூடுதல் பொதுமேலாளர், பி.கே. மிஸ்ரா, கொடி ஏற்றி, ரயில்வே பாதுகாப்பு படையினரின், அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

சென்னை மாநகராட்சியில், கமிஷனர், பிரகாஷ் தேசி கொடி ஏற்றினார்.

தேசிய மாணவர் படை, சாரண – சாரணியர் மற்றும் வாத்திய குழுக்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய, 64 பேருக்கும், கடந்த ஐந்தாண்டுகளை விட, இந்தாண்டு மாணவர் சேர்க்கையை அதிகரித்த, 71 மாநகராட்சி பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும், மாநகராட்சி கமிஷனர், பிரகாஷ் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

கலெக்டர் அலுவலகத்தில் நடந்த, விழாவில், கலெக்டர் சீதாலட்சுமி, தேசிய கொடியை, ஏற்றி வைத்து, காவல் துறையினரின், அணிவகுப்பு மரியாதையை, ஏற்றுக் கொண்டார்.



■ சுதந்திர தின விழாவில், தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்தும், பரிசுகள் வழங்கியும், சென்னை, கலெக்டர் சீதாலட்சுமி கவுரவித்தார். இடம்: கலெக்டர் அலுவலகம்.

விழாவில், 15 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு, பொன்னாடை அணிவித்தும், பரிசுகள் வழங்கியும், கலெக்டர் கவுரவித்தார்.

கோயம்பேடில் உள்ள, மெட்ரோ ரயில் தலைமை அலுவலகத்தில், சுதந்திர தின விழாவை ஒட்டி, மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர், பங்கஜ்குமார் பன்சால், தேசிய கொடி ஏற்றினார்.

சி.எம்.டி.ஏ., அலுவலகத்தில், உறுப்பினர் செயலர், டி.கார்த்திகேயன் தேசிய கொடியேற்றினார். ஊழியர்கள், அதிகாரிகள் அனைவரும் பங்கேற்றனர்.

அரும்பாக்கத்தில் உள்ள, மாநில தேர்தல் கமிஷன் அலுவலகத்தில், மாநில தேர்தல் கமிஷனர், பழனிசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள, தமிழகம் மற்றும் புதுச்சேரி வருமான வரி அலுவலகத்தில், வருமான வரி முதன்மை தலைமை கமிஷனர், ராஜிவ் ஜெயின் தேசிய கொடியேற்றினார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி, ஜி.எஸ்.டி., அலுவலகமான, ஜி.எஸ்.டி., பவனில், சென்னை வடக்கு மண்டல, மத்திய, ஜி.எஸ்.டி., மற்றும் கலால் துறை கமிஷனர், பி.ஹேமாவதி, தேசிய கொடியேற்றினார்.

சென்னை, பல்லவன் இல்லத்தில், மேலாண்மை இயக்குனர், கணேசன், கொடி ஏற்றி, ஊழியர்களுக்கு பரிசுகள் வழங்கினார். சிறப்பாக பணியாற்றிய, 175 பேருக்கு, பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை துறைமுகத்தில், தலைவர், பி.ரவீந்திரன், தேசிய கொடி ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டார்.

மின் வாரிய தலைமை அலுவலகத்தில், மின் தொடரமைப்பு கழக நிர்வாக இயக்குனர், சண்முகம், தேசிய கொடியை ஏற்றினார்.